People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002
Phone: +91-452-2531874 & 2539520 Fax: +91-452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.peopleswatch.org



12.01.2017

# தொடரும் தமிழக காவல்துறையின் கொலைகள்

# பத்திரிகைச் செய்தி

சிவகங்கை மாவட்டம், பெரியகோட்டை, வைரவன்பட்டியைச் சேர்ந்த செல்வேந்திரன் மகன், கார்த்திகைச்சாமி (26/17) பெரியக்கோட்டை அருகே உள்ள நயினாங்குளம் பகுதியில் அவருக்கும் சிவகங்கை மாவட்ட காவல்துறையினருக்கும் நடந்த மோதலில் கார்த்திகைச்சாமி துப்பாக்கியால் சுட்டு கொலை செய்யப்பட்டதாக 2017 ஜனவரி 11 தொலைக்காட்சிகள் வழியாக செய்தி அறியப்பட்டது. மக்கள் கண்காணிப்பகத்தின் உண்மையறியும் குழுவினர் அரசு அதிகாரிகளுக்கு முன்னறிவிப்பு கொடுத்து இச்சம்பவம் தொடர்பாக கள ஆய்வு மேற்கொண்டனர். ஆய்வில் கீழ்க்கண்டவைகள் கண்டறியப்பட்டுள்ளன.

**உண்மையறியும் குழுவினரால் கண்டறியப்பட்டவை**

1. சிவகங்கை மாவட்ட காவல்துறையினரின் மோதல் சாவில் இறந்ததாக கூறப்படும் கார்த்திகைச்சாமி மீது இரண்டு முறை குண்டர் தடுப்புச் சட்டத்தின் மீதும் 34 குற்றவழக்குகளிலும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என்பதை கண்டறியமுடிகிறது.
2. உண்மையறியும் குழுவினரிடம் மோதல் சாவில் இறந்ததாக கூறப்படும் கார்த்திகைச்சாமியின் உறவினர்களில் சிலரும் பலதரப்பட்ட பொதுமக்களும் நயினாங்குளம், பெரியகோட்டை பகுதிவாசிகளும் கார்த்திகைச்சாமி மிகக் கொடூரமான ரவுடி என்றும் எப்போதும் வாளோடுதான் இருப்பார் என்றும் இவர் கொல்லப்படவேண்டிய ஒருநபர்தான் என்றும் காவல்துறையினர் என்கவுண்டரில் இவரைக் கொலை செய்தது சரிதான் என்றும் தெரிவித்தனர். இதன்மூலம் கொலை செய்யப்பட்ட கார்த்திகைச்சாமி மீதான பொதுமக்களின் வெறுப்புணர்வை இக்குழு அறிந்தது.
3. மோதல் சாவில் இறந்ததாக கூறப்படும் கார்த்திகைச்சாமி சில வருடங்களாக சிங்கப்பூரில் வேலை பார்த்து வந்ததாகவும் பின்னர் மீண்டும் சொந்த ஊருக்கு வந்ததும் கூடாநட்பு மூலமும் காவல்துறைக்கு சாதகமாகவும் அவர்களது சொல்படியும் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்தான் என்பதையும் கண்டறிய முடிகிறது. இதன்மூலம்

கார்த்திகைச்சாமியை சிவகங்கை மாவட்ட காவல்துறையினர்தான் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபடவைத்து அவரை ரவுடியாக உருவாக்கியுள்ளனர் என்பதை கண்டறியமுடிகிறது. மேலும் கார்த்திகைச்சாமி சம்மந்தப்படாத பல்வேறு சம்பவங்களிலும் இவரை வேண்டுமென்றே இணைத்து தேடப்படும் குற்றவாளியாக காவல்துறையினர் மாற்றியுள்ளனர். இதனால் கார்த்திகைச்சாமி வீட்டிற்கு வராமல் தொடர்ந்து தலைமறைவாக இருந்துள்ளார் என்பதையும் கண்டறிய முடிகிறது.

4. மோதல் சாவில் இறந்ததாக கூறப்படும் கார்த்திகைச்சாமி தலைமறைவாக இருந்த காலகட்டத்தில் அவரது இருப்பிடத்தை காட்டச் சொல்லி அவரது தந்தை செல்வேந்திரன், அம்மா சுமதி, சகோதரி சுடர்மணி, சித்தி முத்தம்மாள் ஆகியோர் மீது பல்வேறு குற்ற வழக்குகளை சிவகங்கை மாவட்ட காவல்துறையினர் புனைந்துள்ளனர். மேலும் இவர்களை கடுமையாக சித்திரவதை செய்து மிரட்டியுள்ளனர் என்பதை கண்டறிய முடிகிறது.
5. மோதல் சாவில் இறந்ததாக கூறப்படும் கார்த்திகைச்சாமியின் சகோதரர் ராஜேஷ் என்ற ராமைய்யா ராஜன் என்பவரை சிங்கப்பூரில் இருந்து வரவழைத்து விமான நிலையத்தில் அவரைக் கைது செய்து கார்த்திகைச்சாமியின் மீதுள்ள வழக்குகளில் இவரையும் இணைத்து குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழும் இவரைக் கைதுசெய்து தற்போது மதுரை மத்திய சிறையில் இவர் உள்ளதாக எமது குழு அறிகிறது. இதன் மூலம் கார்த்திகைச்சாமியை தேடுவதின் பொருட்டு அவரது குடும்பத்தில் உள்ள அனைவர் மீதும் கஞ்சா உள்ளிட்ட குற்ற வழக்குகளில் சிவகங்கை மாவட்ட காவல்துறையினர் வழக்குகளை புனைந்துள்ளனர் என்பதைக் கண்டறிய முடிகிறது.
6. மோதல் சாவில் இறந்ததாக கூறப்படும் கார்த்திகைச்சாமியின் உடல் பிரேத பரிசோதனைக்காக சிவகங்கை மாவட்ட அரசு மருத்துவமனையில் பிரேதக்கூட அறையில் வைக்கப்பட்டிருந்தது. ஜனவரி 11ம் தேதி காலை முதல் இரவு 8.30மணிவரையில் கார்த்திகைச்சாமியின் இரத்த உறவினர்களுக்கு அவரது சடலத்தை பார்ப்பதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை. மக்கள் கண்காணிப்பகத்தின் உண்மையறியும் குழுவினர் சிவகங்கை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. ஜெயச்சந்திரன் அவர்களை நேரில் சந்தித்து சம்பவம் குறித்து கேட்டறிய அவரது அலுவலகத்திற்கு சென்ற பொழுது அவரது அறையில் இருந்த காவல்துறை துணைத் தலைவர் (DIG) அவர்களையும் ஒரே நேரத்தில் சந்திக்க நேர்ந்தது. அவர்களிடம் எமது குழுவினர், தற்போது வரை

உறவினர்கள் யாருக்கும் மோதல் சாவில் இறந்ததாக கூறப்படும் கார்த்திகைச்சாமியின் உடலை பார்க்க அனுமதிக்கப்படவில்லை என்றும் ஜனவரி 11 அன்று காலை கொலை செய்யப்பட்ட கார்த்திகைச்சாமியின் தாயார் சுமதி அவர்கள் பிரேத கூடத்தின் அறையில் வைக்கப்பட்டிருந்த கார்த்திகைச்சாமியின் உடலைப் பார்க்க அறைக்கு வெளியே சென்றபோது அங்கு நின்றிருந்த பெண்காவலர்கள், சார்பு ஆய்வாளர் ஆகியோரால் தாக்கப்பட்டு சிறிதுநேரம் அவர்களது கட்டுப்பாட்டில் வைக்கப்பட்ட செய்தியையும் தெரிவித்தோம். அத்தகவல் தனக்கு தெரியாது என்றும் உடனடியாக கார்த்திகைச்சாமியின் உடலைப் பார்ப்பதற்கு உறவினர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் காவல்துறை கண்காணிப்பாளர் தெரிவித்தார். எமது குழுவினர் மீண்டும் அன்று இரவு சுமார் 8.40 மணியளவில் சிவகங்கை மாவட்ட அரசு மருத்துவமனைக்கு சென்ற போது, அதுவரை இரத்த உறவினர்கள் கார்த்திகைச்சாமியின் உடலைப் பார்க்க அனுமதிக்கப்படாமல் இருந்தனர். எமது தலையீட்டிற்குப் பின்னரே, இரவு சுமார் 9.00 மணியளவில் கார்த்திகைச்சாமியின் தகப்பனார் செல்வேந்திரன், அம்மா சுமதி, அக்கா சுடர்மணி ஆகியோர் உடலைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர் என்பதை நேரில் ஆய்வு செய்தபோது கண்டறியமுடிந்தது.

7. சிவகங்கை மாவட்ட காவல்துறையினர் மோதல் சாவில் இறந்ததாக கூறப்படும் கார்த்திகைச்சாமியின் தந்தையை சம்பவம் அன்று இரவு 8 மணி முதல் 9 மணி வரை வலுக்கட்டாயமாக அவர்களின் கட்டுப்பாட்டில் வைத்து வெற்றுக் காகிதத்தில் அவரை மிரட்டி கையெழுத்து வாங்க முற்பட்டுள்ளனர் என்பதை எமது குழு நேரில் பார்த்து தெரிந்து கொண்டது.
8. மக்கள் கண்காணிப்பகத்தின் உண்மையறியும் குழுவினர் மருத்துவமனைக்கு வந்த பிறகுதான் கார்த்திகைச்சாமியால் தாக்குதலுக்கு உள்ளானதாக கூறப்படும் காவலர்கள் அவரச சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்று உட்கார்ந்திருந்தவர்களை உடனடியாக தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு (ICU) மாற்றியுள்ளனர் என்பதை எமது குழு நேரில் ஆய்வு செய்த போது அறிந்தது.
9. மக்கள் கண்காணிப்பகத்தின் உண்மையறியும் குழுவினர் சிவகங்கை மாவட்ட அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் (ICU) அனுமதிக்கப்பட்டுள்ள கார்த்திகைச்சாமியால் தாக்கப்பட்டதாக சொல்லப்படும் காவலர்களை சந்திக்க சுமார் மாலை 4 மணியளவில் நேரில் சென்றபோது ஐ.சி.யு அறை முன்பு இருந்த நான்கு சார்பு

ஆய்வாளர்களால் (அல்போன்ஸ், செந்தில்குமார், சக்திவேல் மற்றும் அந்தோணி) தடுக்கப்பட்டு அனுமதி மறுக்கப்பட்டது. தாக்குதலுக்கு உள்ளான காவலர்களின் விபரங்களையும் அவர்கள் தெரிவிக்க மறுத்துவிட்டனர். சிவகங்கை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அல்லது சிவகங்கை மாவட்ட அரசு மருத்துவமனையின் முதல்வர் (DEAN) அனுமதி பெறவேண்டும் என்றும் தெரிவித்தனர். தீவிர சிகிச்சைப்பிரிவின் கண்ணாடி நுழைவாயில் கதவு வழியாக பார்த்தபோது முதல் படுக்கையில் சீருடையுடன் ஒரு காவலர் படுத்திருப்பதை பார்க்க நேர்ந்தது. அவரது இடது முழங்கையில் காயத்திற்கான கட்டு போடப்பட்டிருப்பதை பார்க்க நேர்ந்தது. மற்றவர்களை பார்க்க இயலவில்லை. இதன்மூலம் மாவட்ட காவல்துறையினர் வேண்டுமென்றே தாக்குதலுக்கு உள்ளான காவலர்களின் காய விபரங்களை மறைக்க முற்படுகின்றனர் என்பதையும் தாக்குதலுக்கு உள்ளான காவலர்கள் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்படுகிற அளவிற்கான காயம் / பாதிப்பு ஏற்படவில்லை என்பதை கருதமுடிகிறது.

10. மக்கள் கண்காணிப்பகத்தின் உண்மையறியும் குழுவினர் ஜனவரி 11 அன்று இரவு 7.30 மணியளவில் சிவகங்கை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு அவரைச் சந்திப்பதற்காக சென்றனர். அனுமதிக்காக 30 நிமிடங்கள் காத்திருந்தனர். இரவு 8 மணியளவில் அவரைச் சந்திப்பதற்காக அவரது அறைக்குள் சென்றபோது காவல்துறை கண்காணிப்பாளர் இருக்கையில் டி.ஐ.ஜி திரு. கபில் சாராக்கர் அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அவரது பக்கவாட்டில் காவல்துறை கண்காணிப்பாளர் திரு.ஜெயச்சந்திரன் அவர்கள் அமர்ந்திருந்தார்கள். உண்மையறியும் குழுவினரிடம் டி.ஐ.ஜி அவர்கள் என்கவுன்டர் தொடர்பான தேசிய மனித உரிமை ஆணையத்தின் வழிகாட்டுதல்களை நாங்கள் மிக கவனமாக பின்பற்றுகிறோம் என்றார். ஆனால் இந்த சம்பவத்தில் தேசிய மனித உரிமை ஆணையத்தின் மோதல் சாவு குறித்த வழிகாட்டுதல்களின்படியும் உச்சநீதிமன்றம் வழங்கிய மோதல் சாவு குறித்த உத்தரவுகளின்படியும் இறந்தவரின் உறவினருக்கு அவரது உடலை பார்க்க அனுமதிக்கப்படவில்லை. உண்மையறியும் குழுவினரின் தலையீட்டிற்குப் பின்னரே சுமார் 12 மணி நேரம் கழித்து அவர்கள் அனுமதிக்கப்பட்டனர் என்பதை கண்டறியமுடிகிறது.

11. குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 176 (1) (A)-ன் படி உடனடியாக நடுவர் நீதிபதி விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்கவேண்டும். ஆனால் சம்பவத்தன்று இரவு 9 மணி வரை சிவகங்கை மாவட்ட அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை அறையில்

வைக்கப்பட்டிருந்த கார்த்திகைச்சாமி பிரேத உடலையும் மோதலில் காயமடைந்ததாக கூறப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்று வரும் காவலர்களையும் விசாரணை செய்யவில்லை என்பதை எமது குழு நேரில் கண்டறிந்தது. தாமதத்திற்கான காரணம் குறித்து மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் உண்மையறியும் குழுவினர் நேரில் சந்தித்து கேட்டபோது அவர் உரிய நடுவர் நீதிபதியை விசாரணைக்கு நியமிப்பதில் காலதாமதம் ஏற்பட்டதாக தெரிவித்தார். இது, எதையோ மறைப்பதற்காக வேண்டுமென்றே திட்டமிட்டு நடுவர் நீதிபதி விசாரணையை காலதாமதப்படுத்தியுள்ளனர் என்று சந்தேகிக்க நேருகிறது. பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சார்ந்த உறவினரிடம் நடுவர் நீதிமன்ற நீதிபதி விசாரணை மேற்கொள்ளவில்லை என்பதை நேரில் அறியமுடிந்தது.

12. மோதல் சாவில் இறந்ததாக கூறப்படும் கார்த்திகைச்சாமியின் பிரேத உடல் ஜனவரி 11, 2017 அன்று முழுவதும் பிரேத அறையில் வைக்கப்பட்டு, பிரேத பரிசோதனை செய்யப்படாமல் இருந்தது என்பதை எமது குழு நேரில் அறிந்தது. பிரேத பரிசோதனை அறையின் கதவு பூட்டப்பட்டிருந்தது. மேலும் அந்தக் கட்டிடத்தின் சுற்றுச்சுவரில் உள்ள நுழைவாயில் கதவும் சாத்தப்பட்டு அதற்கு வெளிப்புறமாக காவல்துறையினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

13. மோதல் சாவில் இறந்ததாக கூறப்படும் கார்த்திகைச்சாமியை சிவகங்கை மாவட்ட காவல்துறை தனிப்படையினர் அவரை மோதல் சாவு நடப்பதற்கு முன்னதாக கைது செய்துள்ளனரா என்பதை உண்மையறியும் குழுவினரால் தற்போதையை நிலையில் உறுதி செய்யமுடியவில்லை. ஆயினும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் சுமார் 200-க்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் காவலர்கள் குவிக்கப்பட்டதை மிக கவனமாக எடுத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. ஒரு சிலரைத் தேடிப் பிடிப்பதற்கு அதிகாலை வேளையில் அதிக எண்ணிக்கையில் காவலர் படை வரவழைக்கப்பட்டிருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. இதன் மூலம் கார்த்திகைச்சாமி உள்ளிட்ட குழுவினர் ஏற்கனவே வேறு பகுதியில் முன்கூட்டியே கைது செய்யப்பட்டு, மோதல் சாவு நடந்ததாக சொல்லப்படும் சம்பவ பகுதிக்கு கொண்டு வரப்பட்டு, மோதல் சாவு அரங்கேற்றப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்க நேரிடுகிறது. மேலும் மோதல் சாவில் இறந்ததாக கூறப்படும் கார்த்திகைச்சாமியால் காவலர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் ஜோடிக்கப்பட்டவையாக இருக்கலாம் என்கின்ற பலத்த சந்தேகம் எழுந்துள்ளது.

14. போலி மோதல் சாவுகளுக்கு பெயர் போன காவல் அதிகாரி திரு. வெள்ளைத்துரையின் கீழ் பணியாற்றியவர் சிவகங்கை தாலுகா காவல் நிலைய சார்பு ஆய்வாளர் பூமிநாதன். சிவகங்கை மாவட்டம் திருப்பாசேத்தி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் ஆல்வின் சுதன் கொல்லப்பட்ட வழக்கில் (மக்கள் கண்காணிப்பகம் இவரது கொலையை அப்போதே கடுமையாக கண்டித்தது.) தொடர்புடையவர்கள் மீதான என்கவுன்டர் சம்பவத்தில் திரு.வெள்ளைத்துரையுடன் இணைந்து சார்பு ஆய்வாளர் பூமிநாதனும் ஈடுபட்டார். எனவே இந்த சம்பவம் சிவகங்கை காவல்துறையினரால் அதே பாணியில் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டதாகவே கூடுதலாக சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. மேலும் கார்த்திகைச்சாமியுடன் காரில் இருந்த 6 பேர் தப்பி விட்டதாக காவல்துறை கூறுவதும் நம்பும்படியாக இல்லை. இவர்கள் காவல்துறையால் சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டு, ரகசிய காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவே சந்தேகம் எழுகிறது. சில நாட்களுக்குப் பின்னர் இவர்களும் என்கவுன்டர் எனும் பெயரில் கொலை செய்யப்படலாம் என்ற எண்ணமே வலுப்பெறுகிறது.
15. சிவகங்கை மாவட்டத்தில் குற்றவியல் நடைமுறைச்சட்டத்தின் திருத்தப்பட்டப் பிரிவு 41 A,B,C,D முறையாக 2010-ம்6ஆண்டிலிருந்து பின்பற்றப்படுவதில்லை. அவ்வாறு இச்சட்டப்பிரிவு முறையாக பின்பற்றப்பட்டிருந்தால் காவலில் இருப்பவர்களின் பட்டியல் மாவட்ட காவல்துறை கட்டுப்பாட்டு அறையில் ஆவணப்படுத்தப்பட்டிருக்கும். இது சட்டவிரோத காவலையே ஊக்குவிக்கும் வகையில் உள்ளது என்பதை எமது குழு அறிகிறது.

**பரிந்துரைகள்**

1. மோதல் சாவு சம்பவத்தில் ஈடுபட்ட அனைத்து காவலர்கள் மீதும் தேசிய மனித உரிமை ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்படவேண்டும்.
2. இந்த மோதல் சாவு சம்பவம் குறித்து தமிழக அரசு சி.பி.சி.ஐ.டி விசாரணைக்கு உத்தரவிடவேண்டும்.
3. மோதல் சாவில் இறந்ததாக கூறப்படும் கார்த்திகைச்சாமியின் குடும்பத்தினருக்கு 10லட்ச ரூபாய் இழப்பீட்டினை தமிழக அரசு வழங்கிட வேண்டும்.
4. இறந்துபோன கார்த்திகைச்சாமி தலைமறைவாக இருந்த காலகட்டத்தில் அவரை தேடுவதன் பொருட்டு கார்த்திகைச்சாமியின் குடும்ப உறுப்பினர்கள் (அப்பா, அம்மா,

அண்ணன், சகோதரி மற்றும் சித்தி) மீது காவல் துறையினரால் பதிவு செய்யப்பட்டிருக்கிற வெவ்வேறு வழக்குகளின் உண்மைத் தன்மையை அறியும்பொருட்டு உயர்காவல்துறை அதிகாரிகள் குழுவினரால் மேற்கண்ட வழக்குகள் அனைத்தும் மறு ஆய்வுக்கு உட்படுத்தப்படவேண்டும்.

5. இதுபோன்ற மோதல்சாவு சம்பவத்தில் குற்றவியல்நடைமுறைச்சட்ட பிரிவு 176 (1) (ஏ)ன்படி நடுவர் நீதிமன்ற நீதிபதி விரைவாக சம்பவம் குறித்து விசாரணை மேற்கொண்டு சாட்சிகளை அறிந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். விசாரணையில் இருக்கும் நடுவர் நீதிமன்ற நீதிபதியை மனித உரிமை அமைப்பின் பிரதிநிதிகளும் இறந்துபோன நபரின் குடும்பத்தைச் சார்ந்தவர்களும் அணுகிடும் வகையில் சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

6. மனித உரிமை காப்பு பணியில் ஈடுபடும் நபர்கள் தகவலை சேகரிப்பதற்கும் பெறுவதற்கும் தேடிச் செல்வதற்கும் இருக்கிற உரிமையை அரசும் காவல்துறையும் உறுதிப்படுத்த வேண்டும்.

7. தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து நிகழ்த்தப்பட்டு வரும் மோதல் கொலைகள் அனைத்தையும் உயர்நீதிமன்றம் தானாக (SUO-MOTO) முன்வந்து விசாரணை மேற்கொள்ளவேண்டும்.

என்றும் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி திபேன்)
செயல் இயக்குநர்